## TNPSC GROUP - I

MODEL EXAM – II நாள்: 05.02.2017

1. பிரேசில் நாட்டின் தேசிய பறவை

**(A) Rufos - bellied** (B) Sabia - Laranjeria (C) Hooth Whyre (D) Mifas - flute

2. 2016 – கருப்பு பணம் தடைத் திருத்தச்சட்டத்தின் மூலம் பினாமி சொத்திற்கான தண்டனை எத்தனை ஆண்டுகள்? சொத்தின் அபராதம் என்ன?

(A) 5 Yrs & 25% **(B) 7 Yrs & 25%** (C) 12 Yrs & 28% (D) 5 Yrs & 28%

3. இந்திய அரசியலமைப்பின் 8 வது அட்டவணையில் உள்ள திராவிட மொழிகளின் எண்ணிக்கை

(A) 3 (B) 2 (C) 1 **(D) 4**

4. கோவா மாநிலத்தின் ஆளுநர்

**(A) மிர்துளா சின்கா** (B) நஜ்மா ஹெப்துலா (C) ராம் நாய்க் (D) ராம்நாத் கோவிந்த்

5. பொருத்துக.

| தமிழக அரசு | 2017 | | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|---|---|
| i. திரு.வி.க. விருது | - a. மறைமலை இலக்குவனார் | (A) | b | c | a | d | e |
| ii. திருவள்ளுவர் விருது | - b. வீரமணி | **(B)** | **a** | **b** | **c** | **d** | **e** |
| iii. பாரதியார் விருது | - c. கணபதிராமன் | (C) | e | d | a | b | c |
| iv. பாரதிதாசன் விருது | - d. கவிஞர் பாரதி | (D) | e | a | b | c | d |
| v. காமராசர் விருது | - e. நீலகண்டன் | | | | | | |

6. PSLV –C36 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ரிசோர்சாட் - 2A செயற்கைக் கோள் எதனைச் சார்ந்தது மற்றும் அதன் வரிசையில் இது எத்தனையாவது?

(A) நிலத்தினை மட்டும் ஆய்வு செய்ய - வரிசை 3

(B) நீரினை மட்டும் ஆய்வு செய்ய - வரிசை 3

**(C) புவி மற்றும் வளியை ஆய்வு செய்ய - வரிசை 3**

(D) a மற்றும் b சரி

7. பின்வரும் கூற்றில் தவறானதைத் தேர்க.

**(A) மிருக வதைத் தடைச்சட்டம் 1966ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது**

(B) இதன் அடிப்படையில் காட்சிப்படுத்தப்படும் விலங்குகளை சித்ரவதை செய்தல் கூடாது

(C) இதனை அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டது

(D) இதன் அடிப்படையில் காளை காட்சிப்படுத்தப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது

8. சரியான வரிசையைத் தேர்வு செய்க:- ஜனவரி → டிசம்பர்

(A) ஆஸ்திரேலியா ஓபன் - விம்பிள்டன் - பிரெஞ்ச் ஓபன் - ஐ.அ.ஓபன்

**(B) ஆஸ்திரேலியா ஓபன் - பிரெஞ்ச் ஓபன் - விம்பிள்டன் - ஐ.அ.ஓபன்**

(C) ஐ.அ.ஓபன் - விம்பிள்டன் - பிரெஞ்ச் ஓபன் - ஆஸ்திரேலியா

(D) ஐ.அ.ஓபன் - பிரெஞ்ச் ஓபன் - விம்பிள்டன் - ஆஸ்திரேலியா

9. ஆசியான் அமைப்பில் உறுப்பு நாடு அல்லாததைத் தேர்க

**(A) இந்தியா** (B) புருனே (C) லாவோஸ் (D) வியட்நாம்

10. மேகாலயா – மாநிலத்தில் அமைந்துள்ள உயிர்க்கோளப் பகுதி

(A) பச் மாறிலி (B) திப்ருசைகோவ (C) சிமிலிபால் **(D) நாக்ராக்**

11. மின் பரிவர்த்தனை மற்றும் பணமில்லா சேவை குறித்து அறிக்கை தயார் செய்ய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர்

**(A) சந்திரபாபுநாயுடு** (B) T.V.S.N. பிரசாத் (C) நிதின் கட்காரி (D) சியாம் பெனகல்

12. SAMPRITE- 2016 என்ற கூட்டு ராணுவப் பயிற்சி "INDIA – BANGLADESH" இடையில் எங்கு நடைபெற்றது?

(A) விசாகப்பட்டினம் **(B) டாக்கா** (C) கொச்சி (D) திம்பு

13. "போப.்.ஸ்" மற்றும் "டைமோஸ்"என்பது எதனுடைய துணைக் கோள்கள்?

**(A) செவ்வாய்** (B) யுரேனஸ் (C) சனி (D) வியாழன்

14. 2016-ல் மலேரியாவை முற்றிலும் ஒழித்த நாடாக WHO ஆல் அறிவிக்கப்பட்ட நாடு

(A) இலங்கை (B) கிர்கிஸ்த்தான்

(C) வங்கதேசம் **(D) a&b இரண்டும் சரி**

15. "கரன்ங்" எனப்படும் இந்தியாவின் முதல் Cashless தீவு எங்குள்ளது?

(A) மிசோரம் **(B) மணிப்பூர்** (C) மேகாலயா (D) சிக்கிம்

16. 2016 - ல் தனது FM Radio சேவையை நிறுத்திய நாடு

**(A) நார்வே** (B) ஜப்பான் (C) சீனா (D) பிஜிதீவு

17. 5 – வது சூரிச் சாலஜ்ச் செஸ் தொடர் நடைபெற்ற நாடு

**(A) சுவிட்சர்லாந்து** (B) டென்மார்க் (C) ஆஸ்திரியா (D) இங்கிலாந்து

18. சர்ஜிகல் ஸ்ட்ரைக் என்பது எந்த படைப்பிரிவின் அதிரடித் தாக்குதல்?

**(A) Army of India** (B) Navy of India (C) Air force of India (D) CRPF

19. உலக சுற்றுலா தினம்

(A) Jan - 24 (B) Jan - 4 (C) May -10 **(D) Jan -25**

20. இந்திய அஞ்சல் செலுத்து வங்கி எந்த ஆண்டு முதல் செயல்பாட்டிற்கு வரவுள்ளது?

(A) 2018 **(B) 2017** (C) 2010 (D) 2013

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்தர கூடம்

21. குறைந்தது எத்தனை தொழிலாளர்களுடன் செயல்படும் நிறுவனங்கள், தற்போது “PF” (வருங்கால வைப்பு நிதி) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது?

(A) 28 (B) 24 **(C) 20** (D) 25

22. “மாசிம்”திட்டத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் நாடு

(A) **சீனா** (B) இந்தியா (C) வியட்நாம் (D) ஜப்பான்

23. நமது நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானி விருதை பெற்றவர்

(A) R.S.பியூசா **(B) R.S.சுந்தர்** (C) S.V. நாயக் (D) S.M. ஜின்னா

24. ஜப்பானின் ராணுவ செயற்கைகோள்

(A) GSLV – mark -3 **(B) Kirameki – 2** (C) ஷிமோய் - 2A (D) கியூரியா சிட்டி

25. “ஜிம்னாஸ்டிக்” – என்பதன் தமிழ்சொல்

(A) உடல் பல் வளைய கலை (B) உடல் மடக்கு கலை

**(C) உடல் வளைப்புக் கலை** (D) மெலி உடல் திறன் கலை

26. சர்வதேச அளவில் மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள ரூ.2000 கோடி நன்கொடை அளித்துள்ள நிறுவனம்?

**(A) பேஸ்புக்** (B) ஆர்குட் (C) கூகுள் (D) வெரைசான்

27. பயோகொனமி மீதான தேசியப்பணி எந்த இந்திய நகரில் தொடங்கப்பட்டுள்ளது?

(A) கொச்சி (B) கவுகாத்தி (C) புதுடெல்லி **(D) ஷில்லாங்**

28. நிறச் - சாயத்திலிருந்து சூரிய மின்சாரம் தயாரிக்கும் நாடு

(A) ஆஸ்திரியா (B) இஸ்ரேல் **(C) ஆஸ்திரேலியா** (D) சைனா

29. உலக டூர் டென்னிஸ் - 2016 நடைப்பெற்ற இடம்

**(A) லண்டன்** (B) நியூயார்க் (C) பெல்காம் (D) டோக்கியோ

30. ISL – Football - (2016) லீக்கில் சாம்பியன் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த அணி

(A) சென்னை - கொல்கத்தா **(B) கொல்கத்தா - கேரளா**

(C) கேரளா - மும்பை (D) மும்பை - கோவா

31. ஆதி மனிதனின் கால் சுவடு காணப்படும் எரிமலை அமைந்துள்ள நாடு

(A) ஜப்பான் (B) இந்தோனேசியா **(C) தான்சானியா** (D) நார்வே

32. ஐந்தாவது இந்திய- சர்வதேச பட்டு கண்காட்சி நடைபெற்ற நகரம்

(A) பெங்களூர் (B) சூரத் **(C) புதுடெல்லி** (D) கோவா

33. உலக போலியோ தினம் கடைபிடிக்கப்படுவது

(A) Oct -25 (B) Oct -26 **(C) Oct -24** (D) Oct -23

34. தலாய்லாமாவுக்கு கௌரவ குடியுரிமை வழங்கவுள்ள நகரம்

(A) ரோம் **(B) மிலன்** (C) வெனிஸ் (D) புரோச்

35. உலக கோப்பை கபாடியில் சாம்பியன் பட்டம் வென்ற நாடு

**(A) இந்தியா** (B) பாகிஸ்தான் (C) ஈரான் (D) சீனா

36. நவம்பர் – முதல் தேதியை புகையிலை ஒழிப்பு தினமாக அறிவித்துள்ள நகரம்

(A) ஒடிசா - வீலர்
**(B) பஞ்சாப் - அமிர்தசரஸ்**
(C) தமிழ்நாடு - தேனி
(D) மேற்கு வங்கம் - கொல்கத்தா

37. போலியோ சொட்டு மருந்தை கண்டறிந்தவர்

(A) தாமஸ் ஆர்பர்ட் (B) கிரிஸ்டியன் பேனர்ட் (C) மெக்கல்லம் **(D) ஜோனஸ் சால்க்**

38. "செர்ரி மலர்" திருவிழா எந்த மாநிலத்தில் நடைபெற்றது?

(A) தமிழ்நாடு **(B) மேகாலயா** (C) மிசோரம் (D) அசாம்

39. டால்கோ – Express ரயிலின் வேகம்

(A) 160 km/hr (B) 190km/hr (C) 170 km.hr **(D) 180 km/hr**

40. ரோஜர்ஸ் கோப்பை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) கனடியன் ஓபன்
(B) கனடியன் மாஸ்டர்ஸ்
(C) டொராண்டோ மாஸ்டர்ஸ்
**(D) மேற்கண்ட அனைத்தும் சரி**

41. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. ஆக்சாலிக் அமிலம் | - | 1. வெண்ணெய் | (A) | 1 | 3 | 2 | 4 |
| b. அஸ்கார்பிக் அமிலம் | - | 2. தக்காளி | (B) | 2 | 1 | 4 | 3 |
| c. பியூட்ரிக் அமிலம் | - | 3. திராட்சை | (C) | 3 | 2 | 1 | 4 |
| d. டார்டாரிக் அமிலம் | - | 4. ஸ்ட்ராபெரி | **(D)** | **2** | **4** | **1** | **3** |

42. சரியான கூற்றுகளைக் கண்டறிக.

I. அமிலமும், காரமும் சேர்ந்து உப்பைத்தருவது நடுநிலையாக்கல் வினை எனப்படுகிறது.

II. ஒரு சராசரி மனிதனின் உடலில் 350 கிராம் உப்பு உள்ளது.

III. லூயி அமிலமும், லூயி காரமும் சேர்ந்து அணைவுச்சேர்மத்தை தருகிறது.

IV. சலவைத்தூளின் வெளுக்கும் பண்புக்குக் காரணம் குளோரின் வாயு.

**(A) I, III, IV** (B) I, II, III (C) I, IV (D) II, III, IV

43. $(pt\ (NH_3)_6\ cl_2)$ – ல் பிளாட்டினத்தின் (pt) ஆக்சிஜனேற்ற நிலை

(A) 4 (B) 0 **(C) 2** (D) 6

44. CAN – ன் மூலக்கூறு வாய்பாடு

(A) $Ca\ (NO_3)_2\ .5\ NH_4\ NO_3$
**(B) $Ca\ (NO_3)_2\ .\ NH_4\ NO_3$**
(C) $5\ Ca\ (NO_3)_2\ .5\ NH_4\ NO_3$
(D) $Cu\ (NO_3)_2\ .5\ NH_4\ NO_3$

45. பொருத்துக.

a. எத்திலீன் கிளைக்கால் + டைமீத்தைல் டெரிதாலேட் - 1. பியூனா - S

b. பியூட்டா டையீன் + அக்ரிலோ நைட்ரைல் - 2. தயோக்கால்

c. பியூட்டா டையீன் + ஸ்டைரீன் - 3. டெரிலீன் (அ) டேக்ரான்

d. எத்திலீன் டைகுளோரைடு + சோடியம் பாலி சல்பைடு- 4. பியூனா - S

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| **(C)** | **3** | **4** | **1** | **2** |
| (D) | 4 | 3 | 2 | 1 |

46. ஆஸ்துமாவை குணப்படுத்தப் பயன்படும் வாயுக்கலவை

(A) ஹீலியம் + நியான் (B) நியான் + ஹைட்ரஜன்

(C) நைட்ரஸ் ஆக்ஸைடு + ஹீலியம் **(D) ஹீலியம் + ஆக்சிஜன்**

47. கார்பனின் புறவேற்றுமை வடிவமான புல்லரீனில் காணப்படும் கார்பன் மற்றும் பக்கங்களின் எண்ணிக்கை முறையே

(A) 60, 20 **(B) 60, 32** (C) 50, 12 (D) 40, 20

48. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காரீயம் | a. ஹார்ன் சில்வர் | I. கார்பனேட் தாது |
| 2. மெக்னீசியம் | b. கலீனா | II. ஹேலைடு தாது |
| 3. சில்வர் | c. கேசிடரைட் | III. ஆக்ஸைடு தாது |
| 4. வெள்ளீயம் | d. மேக்னசைட் | IV. சல்பைடு தாது |

(A) 1 – c – III, 2 – d – II, 3 – a – IV, 4 – b - I

(B) 1 – d - II 2 – c - III 3 – b – I, 4 – a - IV

**(C) 1 – b – IV, 2 – d – I, 3 – a – II, 4 – c - III**

(D) 1 – a – I, 2 – b – II, 3 – c– III, 4 – d - IV

49. கணினியில் ----------------- என அறிவிக்கப்பட்ட உறுப்புகளை அந்த இனக்குழுக்கள் மட்டுமே அணுகமுடியும்

**(A) Private** (B) Public (C) Protected (D) எதுவுமில்லை

50. கீழ்க்கண்டவற்றுள் எந்த செயற்கூறு இரண்டு சரங்களை ஒப்பிட பயன்படுகிறது?

(A) Strcpy ( ) **(B) Cmpstr ( )** (C) Cypstr ( ) (D) Strcmp ( )

51. தன்னைத்தானே நகலெடுத்து பெருக்கி கொண்டு, கணிப்பொறியின் தரவுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது

(A) Spam (B) உரிமையிலா நகலாக்கம் (piracy)

**(C) நச்சு நிரல் (Virus)** (D) எதுவுமில்லை

52. கீழ்க்காணும் நினைவகங்களில் அதிகப்படியான தகவல்களை சேமிக்க பயன்படுவது எது?

(A) முதன்மை நினைவகம் (Primary memory)

**(B) இரண்டாம் நிலை நினைவகம் (Auxiliary storage)**

(C) கேச் நினைவகம் (Cache memory)

(D) நேரடி அணுகல் நினைவகம் (RAM)

53. 'Bluetooth' தொழில்நுட்பம் என்பது

(A) செயற்கைக்கோள் தொடர்பு

(B) இரு கருவிகளுக்கிடையே உள்ள கம்பி தொடர்பு

**(C) இரு கருவிகளுக்கிடையே உள்ள கம்பி இல்லா தொடர்பு**

(D) தரைவழி தொலைபேசியிலிருந்து கைப்பேசி தொடர்பு

54. நிலநடுக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளை அளக்கப் பயன்படும் கருவி

(A) ரிக்டர் அளவுகோல் **(B) மெர்காலி அடர்த்தி அளவுகோல்**

(C) லாக்டிக் அளவுகோல் (D) மெர்காலி பாதிப்பு அளவுகோல்

55. மேற்கு தொடர்ச்சி மலைகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர்

(A) மாதவன் (B) கிருஷ்ணமாச்சாரி **(C) கஸ்தூரிரங்கன்** (D) திலக்பாண்டே

56. கூற்று (A) : கடல் மட்ட வெப்பநிலையானது வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

காரணம் (R) : வெப்ப நீரோட்டங்கள் வெப்பநிலையினை அதிகரிக்கவும் அதேபோல் குளிர் நீரோட்டங்கள் வெப்பநிலையினைக் குறைக்கவும் செய்கின்றது.

**(A) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R, A விற்கு சரியான விளக்கம்**

(B) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R, A விற்கு சரியான விளக்கமல்ல

(C) A சரி ஆனால் R தவறு

(D) A தவறு ஆனால் R சரி

57. தவறான இணையைத் தேர்ந்தெடு.

**(A) தேசிய சர்க்கரை ஆராய்ச்சி மையம் - டேராடூன்**

(B) நோய் எதிர்ப்பு ஆராய்ச்சி மையம் - சண்டிகர்

(C) வெப்ப அயனவன ஆராய்ச்சி மையம் - ஜபல்பூர்

(D) இந்திய புவிகாந்த ஆராய்ச்சி மையம் - மும்பை

58. கீழே உள்ள எந்த நகரம் தங்க நாற்கரச்சாலை திட்டத்தில் சேராது?

(A) சூரத் (B) பெங்களூர் (C) பூரி **(D) ராய்பூர்**

59. வடகொரியா மற்றும் – தென்கொரியா நாடுகளுக்கு இடையேயான எல்லைக்கோடு

**(A) 38 ஆவது இணைகோடு** (B) 17 ஆவது இணைகோடு

(C) 49 ஆவது இணைகோடு (D) 56 ஆவது இணைகோடு

60. பத்ரிநாத் அமைந்துள்ள ஆற்றுச் சமவெளி

**(A) கங்கை** (B) சட்லஜ் (C) யமுனை (D) காண்டக்

61. சரியான கூற்றினைத் தேர்க.

1. தமிழ்நாட்டில் உள்ள காடுகள் அளவு 17%
2. தமிழ்நாட்டின் கிழக்கு பகுதியில் காடுகள் பரவல் மிக குறைவு

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் **(C) இரண்டும்** (D) எதுவுமில்லை

62. இந்தியாவில் சுனாமி ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம்

(A) பெங்களூர் **(B) ஹைதராபாத்** (C) டெல்லி (D) சென்னை

63. கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்திய பகுதிகளுள் பசுமை மாறாக் காடுகள் இல்லாத பகுதி

(A) அந்தமான் தீவுகள் (B) அஸ்ஸாம்

(C) மேற்கு தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவு **(D) தக்காண பீடபூமி**

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

64. தென் அலைவு என்பது இப்பெருங்கடல்களுக்கு இடையே நடைபெறுகிறது

**(A) இந்திய மற்றும் பசுபிக்** (B) அட்லாண்டிக் மற்றும் பசுபிக்

(C) இந்திய மற்றும் அட்லாண்டிக் (D) ஆர்டிக் மற்றும் அட்லாண்டிக்

65. நர்மதை மற்றும் தபதி ஆறுகளுக்கு நடுவில் அமைந்துள்ள மலைத்தொடர்

(A) ஆரவல்லி மலைத்தொடர் (B) மேற்கு தொடர்ச்சி மலைகள்

**(C) சாத்பூரா மலைத்தொடர்** (D) விந்திய மலைத்தொடர்

66. பொருத்துக.

| துறைமுகங்கள் | | சிறப்பு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. கல்கத்தா | - | 1. டால்பின் நோஸ் துறைமுகம் | (A) | 1 | 2 | 3 | 4 |
| b. பாரதீப் | - | 2. இரும்புத் துறைமுகம் | (B) | 2 | 3 | 1 | 4 |
| c. விசாகப்பட்டினம் | - | 3. மாங்கனிசு அதிக ஏற்றுமதி | **(C)** | **4** | **3** | **1** | **2** |
| d. மர்மகோவா | - | 4. வைரத் துறைமுகம் | (D) | 4 | 3 | 2 | 1 |

67. கூற்று (A) : திரள் மேகங்கள் பனித்துகள்களை முதன்மையாகக் கொண்டிருக்கும்.

காரணம் (R) : திரள்மேகங்கள் அதிக உயரத்தில் காணப்படுகின்றன.

(A) A மற்றும் R சரியானவை R, A விற்கு சரியான விளக்கம்

**(B) A மற்றும் R சரியானவை R, A விற்கு சரியான விளக்கமல்ல**

(C) A சரி ஆனால் R தவறு

(D) A தவறு ஆனால் R சரி

68. தவறான இணையைத் தேர்ந்தெடு.

| நீர்வீழ்ச்சி | | நதி |
|---|---|---|
| (A) ஜோக் | - | சராவதி |
| **(B) ரோஹூட்** | - | **தபதி** |
| (C) சிவசமுத்திரம் | - | காவேரி |
| (D) ஹீண்ட்ரு | - | சுபர்ணரேகா |

69. ஒருவரின் இரத்த வகைகள் எதனால் கட்டுபடுத்தப்படுகிறது?

(A) ஹீமோகுளோபின் (B) ஹார்மோன் (C) நொதிகள் **(D) ஜீன்கள்**

70. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. எலெசித்தல் (கருவுணவு அற்றது) | - | 1. இருவாழ்விகள் | (A) | 3 | 1 | 4 | 2 |
| b. மைக்ரோ லெசித்தல் | - | 2. பாலூட்டிகள் | (B) | 3 | 1 | 2 | 4 |
| c. மீசோலெசித்தல் | - | 3. பறவைகள் | (C) | 2 | 4 | 3 | 1 |
| d. மேக்ரோலெசித்தல் | - | 4. ஆம்பியாக்ஸிஸ் | **(D)** | **2** | **4** | **1** | **3** |

71. சர்வதேச அளவில் எதிர்ப்புப் பொருளுக்கு பயன்படுத்தப்படும் சொல்

(A) ஸ்டீராய்டுகள் (B) ஆன்டிபாடி (C) ஆன்டிஜன் **(D) இம்னோகுளோபுலின்**

72. ஓசோன் படலத்தை அளவிடும் அலகு

(A) பியூகிதா (B) பியர்சன் (C) மில்லி மீட்டர் **(D) டாப்சன்**

73. தவறானதைக் கண்டறி

I. BOD – (Biological oxygen Demend) என்பது அனைத்து நீர்வாழ் நுண்ணுயிரிகளின் ஆக்ஸிஜன் பற்றாக்குறையைக் குறிப்பிடுவது.

II. ஆற்றுநீர், கடல்நீர் என அனைத்து நீர்நிலைகளிலும் கழிவுநீர் கலக்கும்போது BOD அதிகரிக்கும்.

III. யூட்ரோபிகேஷன் நிகழ்வு BOD நிகழ்வுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது.

IV. யூட்ரோபிகேஷன் போது நீரில் கரையக்கூடிய ஆக்ஸிஜன் குறைகிறது.

(A) III தவறு (B) அனைத்தும் தவறு **(C) II தவறு** (D) II, III, IV தவறு

74. கீழ்கண்டவற்றுள் எதன் குறைபாட்டால் மனிதர்களுக்கு அனிமியா ஏற்படுகிறது

1. விட்டமின் K 2. விட்டமின் $B_{12}$ 3. போலிக் அமிலம்

(A) அனைத்தும் **(B) 2 & 3** (C) 1 & 2 (D) 3 மட்டும்

75. ஆண்டிடையூரிடிக் ஹார்மோன் என்றழைக்கப்படுவது

**(A) வாசோபிரசலின்** (B) ரிலாக்சின் (C) ஆக்ஸிடோசின் (D) அட்ரீனலின்

76. மனித விந்துசெல்லில் காணப்படும் உடற்குரோமோசோம் எண்ணிக்கை

**(A) 22** (B) 23 (C) 44 (D) 46

77. கூற்று (A) : முந்திரி கனியில் பூக்காம்பு உப்பி பழம் போன்று தோற்றமளிக்கிறது.

காரணம் (R) : சமற்பை அதனோடு தொடர்புடைய மலரின் துணை பாகங்களிலிருந்து தோன்றுவது பொய்கனி. இதனை சூடோகார்ப் என்றும் அழைப்பர்.

**(A) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கம்**

(B) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல

(C) A சரி ஆனால் R தவறு

(D) A தவறு ஆனால் R சரி

78. சணல் நார் இத்தாவரத்தில் இருந்து பெறப்படுகிறது

(A) காஸிபியம் ஹிர்சுட்டம் **(B) கார்காரஸ் ஒலிடோரியஸ்**

(C) கோகஸ் நியுசி∴பெரா (D) காஸிபியம் பார்∴படென்ஸ்

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

79. தவறானதைக் கண்டறிக.

I. சைலத்தில் சைலம் பாரன்கைமா மட்டும் உயிரற்ற செல்கள்.

II. புளோயத்தில் புளோயம் பாரன்கைமா மட்டும் உயிரற்ற செல்கள்.

III. ஸ்கிளிரன்கைமாவில் ஸ்கிளிரைடுகள் உயிருள்ளவையாகவும் நார்கள் உயிரற்றவையாகவும் காணப்படும்.

**(A) I, III தவறு** (B) எதுவுமில்லை (C) I மட்டும் (D) III மட்டும்

80. தக்காளி, ஆப்பிள் ஆகியவற்றில் விதையிலா கனிகளை உருவாக்குபவை

**(A) ஆக்ஸின்** (B) இப்ரலின் (C) சைட்டோகைனின் (D) எத்திலின்

81. கிளைகாலிசிஸ் முடிவில் கிடைப்பது

**(A) பைருவிக் அமிலம்** (B) சிட்ரிக் அமிலம்

(C) RUBP (D) பாஸ்போ கிளிசரிக் அமிலம்

82. அனிச்சை செயல் இல்லாத ஒன்று

(A) இருமல் (B) தும்மல் (C) கொட்டாவி **(D) அழுதல்**

83. ஓரினக்கலப்பில் ஜீனோடைப்பின் விகிதம்

(A) 3:1 **(B) 1:2:1** (C) 1:3:1 (D) 2:1

84. “அமைச்சக வளைவின் அடிப்படைக்கல்” என்றும் சமமானவர்களில் முதலானவர் என்றும் அழைக்கப்படுபவர்

(A) குடியரசுத்தலைவர் **(B) பிரதமர்**

(C) ஆளுநர் (D) உச்சநீதிமன்ற நீதிபதி

85. வரைவுக்குழுவின் வழிகாட்டி

(A) ராஜேந்திர பிரசாத் (B) B.R. அம்பேத்கர்

**(C) J. நேரு** (D) வல்லபாய் படேல்

86. தவறானதைத் தேர்க.

(A) 16-வது மாநிலம் - நாகலாந்து

(B) 17-வது மாநிலம் - ஹரியானா

(C) 18-வது மாநிலம் - ஹிமாச்சல் பிரதேசம்

**(D) 19-வது மாநிலம் - மேகாலயா**

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

87. பொருத்துக.

| தடுப்புக் காவல் சட்டங்கள் | | ஆண்டு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. MISA | - | 1. 1980 | (A) | 2 | 3 | 4 | 1 |
| b. TADA | - | 2. 2002 | (B) | 1 | 2 | 3 | 4 |
| c. POTA | - | 3. 1971 | **(C)** | **3** | **4** | **2** | **1** |
| d. NSA | - | 4. 1985 | (D) | 3 | 4 | 1 | 2 |

88. விதி – 32-ஐ இந்திய அரசியல் அமைப்பின் மனசாட்சி என்று கூறியவர்

(A) அம்பேத்கர் **(B) J.நேரு** (C) காந்தி (D) ராஜேந்திர பிரசாத்

89. கீழ்க்காணும் கூற்றுகளைக் கவனி. சரியானது எது/எவை?

I. அடிப்படை உரிமைகள் முழுமையானவை. வரையறுக்கப்பட்டவை.

II. எந்தவொரு அவசரநிலை பிரகடனத்தின் போதும் நிறுத்தி வைக்கப்படாத அரசியலமைப்பு விதி 19 மற்றும் 20

(A) I, II மட்டும் சரி (B) II மட்டும் சரி **(C) எதுவுமில்லை** (D) I மட்டும்

90. மாநிலங்களுக்கிடையேயான குழு பற்றிய கூற்றுகளில் சரியானது

I. பரிந்துரை – சர்க்காரியா குழு.

II. இதை நியமனம் செய்பவர் - ஆளுநர்

III. இதன் பணி – மாநிலங்களுக் கிடையே உள்ள பிரச்சனைகள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

IV. இக்குழுவில் 4 வட்டாரக் குழுக்களும், 6 மண்டலக் குழுக்களும் உள்ளன.

(A) I, II, III சரி (B) I, IV சரி **(C) I, III சரி** (D) அனைத்தும் சரி

91. சரியானது எது

1. அசோக் மேத்தா குழு - 1987
2. ஹனுமந்தராவ் குழு - 1983
3. GVK ராவ் குழு - 1985
4. L.M. சிங்வி குழு - 1986

(A) 1, 2 மட்டும் **(B) 3, 4 மட்டும்** (C) 1, 3 மட்டும் (D) எதுவுமில்லை

92. நிர்வாக சீர்திருத்த ஆணையம் தனது அறிக்கையை சமர்பித்த ஆண்டு?

(A) 1966 (B) 1968 **(C) 1969** (D) 1967

93. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி. சரியானது எது/எவை?

I. நிர்வாக தீர்ப்பாயச் சட்டம் 1985-ன் படி 1986-ல் ஏற்படுத்தப்பட்டது.

II. நிர்வாக தீர்ப்பாயச் சட்டமானது உச்சநீதிமன்ற அதிகார வரம்பிற்கு மட்டும் உட்பட்டது.

(A) I, III சரி **(B) II மட்டும்** (C) I மட்டும் சரி (D) இரண்டும் தவறு

94. தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான தார்குண்டே மற்றும் தினேஷ் கோஸ்வாமி கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ள ஆண்டுகள் முறையே

(A) 1975, 1990 (B) 1974, 1995 **(C) 1974, 1990** (D) 1974, 1980

95. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1950 **(B) 1951** (C) 1952 (D) 1961

96. பொருந்தாதது?

(A) மத்திய புலனாய்வு நிறுவனம் - 1963

(B) மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் - 1964

**(C) ஊழல் தடுப்புச் சட்டம் - 1998**

(D) மாநில தகவல் ஆணையம் - 2005

97. ஊழலை தடுப்பதற்கான வழிகளில் ஒன்றாக அரசாங்கமே தேர்தல் நிதி அளிக்கும் முறையை செயல்படுத்த பரிந்துரை செய்த குழு

(A) வோரா கமிட்டி (B) தினேஷ் கோஷ்வாமி கமிட்டி

**(C) இந்திரஜித் கமிட்டி** (D) தார்குண்டே கமிட்டி

98. அதிகமுறை அவசரச் சட்டங்களை பிறப்பித்த குடியரசுத் தலைவர்

(A) ஜாகிர் உசேன் (B) கியானி ஜெயில் சிங்

**(C) பக்ருதீன் அலி முகமது** (D) நீலம் சஞ்சீவ ரெட்டி

99. தமிழ்நாடு சட்டமேலவை கலைக்கப்பட்ட ஆண்டு

(A) 1976 (B) 1980 **(C) 1986** (D) 1988

100. மதிப்பீட்டுக் குழு உருவாக்கப்பட்ட ஆண்டு?

**(A) 1950** (B) 1955 (C) 1952 (D) 1951

101. தவறான இணையைத் தேர்க. விதி

**(A) உச்சநீதிமன்றம் குடியரசு தலைவருக்கு ஆலோசனை - 142**

(B) உச்சநீதிமன்றத்தின் முதல் வரம்பு அதிகாரம் - 131

(C) உச்சநீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றம் - 129

(D) உச்சநீதிமன்றத்தின் நீதிப் பேராணை அதிகாரம் - 32

102. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி. சரியானது எது/எவை?

I. தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவர போராடியவர் அரவிந்த் கெஜ்ரிவால்.

II. இந்தப் போராட்டத்திற்காக இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

(A) இரண்டும் சரி **(B) I மட்டும்** (C) இரண்டும் தவறு (D) II மட்டும்

103. மன்னர் மானியமுறை ஒழிப்புக்கு காரணமான சட்டதிருத்தம்

**(A) 26 வது சட்டதிருத்தம் 1971** (B) 25 வது சட்டதிருத்தம் 1971-25

(C) 27 வது சட்டதிருத்தம் 1971-27 (D) 24 வது சட்டதிருத்தம் 1971-24

104. கூற்றுகளைக் கவனி.

I. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் 1993-ல் ஏற்படுத்தப்பட்டது

II. முதல் பிற்படுத்தப்பட்டோருக்கான குழு - 1953

III. இரண்டாவது பிற்படுத்தப்பட்டோருக்கான குழு - 1982-ல் அமைக்கப்பட்டது.

IV. இதற்கான சரத்து - 340

இவற்றில் சரியானதைத் தேர்க.

(A) அனைத்தும் சரி (B) I, II, III சரி **(C) I, II, IV சரி** (D)I, IV மட்டும் சரி

105. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி. சரியானது எது/எவை?

I. பொது பணங்களின் பாதுகாவலன் - CAG

II. ஊதியம் மற்றும் படிகளை நிர்ணயம் செய்வது - குடியரசுத்தலைவர்

III. CAG பாராளுமன்றத்திற்கு மட்டும் பொறுப்பு உடையவர்

IV. இந்தியாவின் முதல் CAG - ஸ்ரீ.வி. நரஹரிராவ்

(A) அனைத்தும் சரி **(B) I, III, IV சரி** (C) I, II, IV சரி (D)I, II, III மட்டும்

106. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

**(A) 1997** (B) 1996 (C) 1995 (D) 1994

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

107. கூற்றைக் கவனி: தவறானதைத் தேர்க.

I. இந்திய ஆட்சி மொழிக்கான சரத்து - 343-351

II. இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி அறிவிக்கப்பட்ட ஆண்டு - 1956

III. 1955-ல் ஆட்சி மொழிக் கமிஷன் BG-கேர் தலைமையில் அமைக்கப்பட்டது.

IV. ஆட்சி மொழிகள் திருத்தச் சட்டம் - 1965

(A) I, II, IV தவறு **(B) II, IV சரி** (C) I, II, III (D) II, III மட்டும்

108. ஆளுநரின் நிர்வாக அதிகாரம் பற்றி குறிப்பிடும் சரத்து

**(A) 154** (B) 155 (C) 156 (D) 153

109. கொல்கத்தாவில் வணிகத்தலம் அமைக்க 1690-ல் ஆங்கிலேயருக்கு அனுமதி வழங்கிய மொகலாய மன்னர்

**(A) ஔரங்கசீப்** (B) ஜஹாங்கீர்

(C) இரண்டாம்-ஷா-ஆலம் (D) இரண்டாம்-பகதுர்-ஷா

110. ஆங்கிலேயரை வங்காளத்தின் ஆட்சியாளராக மாற்றிய போர்

(A) பிளாசிப்போர் (B) இரண்டாம் தரெய்ன் போர்

(C) மூன்றாம் பானிபட் போர் **(D) பக்சார் போர்**

111. இரயத்துவாரி முறையை சென்னை மாகாணத்தில் சர் தாமஸ் மன்றோ அறிமுகம் செய்த ஆண்டு?

**(A) 1820** (B) 1818 (C) 1822 (D) 1819

112. நவீன மேற்கத்தியக் கல்வியின் தந்தை

(A) டல்ஹெளசி பிரபு (B) கர்சன் பிரபு **(C) வில்லியம் பெண்டிங்** (D) ரிப்பன் பிரபு

113. பொருத்துக.

| முக்கியத் தோற்றங்கள் | | ஆண்டுகள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பூமியின் தோற்றம் | - | 1. 4700 ஆண்டுகளுக்கு முன் | (A) | 1 | 2 | 3 | 4 |
| b. மனிதனின் தோற்றம் | - | 2. 8000 ஆண்டுகளுக்கு முன் | (B) | 1 | 2 | 4 | 3 |
| c. வேளாண்மை தோற்றம் | - | 3. 40,000 ஆண்டுகளுக்கு முன் | **(C)** | **4** | **3** | **2** | **1** |
| d. நகரங்களின் தோற்றம் | - | 4. 460 கோடி ஆண்டுகளுக்கு முன் | (D) | 4 | 3 | 1 | 2 |

114. வேதப்பாடல்களின் உரைநடை வடிவம் என அழைக்கப்படுபவை

**(A) பிராமணங்கள்** (B) உபநிடதங்கள் (C) ஆரண்யங்கள் (D) A மற்றும் C

சாதனையாளர்களின் சாத்திர கூடம்

115. தவறானதைத் தேர்க.

(A) ஹரப்பா - 1921 - தயாராம் சகானி

(B) மொகஞ்சதாரோ - 1922 - R.D. பானர்ஜி

(C) லோத்தல் - 1953 - S.R. ராவ்

**(D) சான்குதாரோ - 1933 - கோஷ்**

116. புத்த சமயத்தின் நான்காவது மாநாட்டின் தலைவர்

**(A) வசுமித்திரர்** (B) சபக்கமி (C) உபகுப்தர் (D) மகாகாஷ்யபர்

117. இந்தியாவில் காந்தாரக்கலை தோன்ற யாருடைய படையெடுப்பு காரணமாக அமைந்தது?

(A) அசோகர் (B) கனிஷ்கர் **(C) அலெக்சாண்டர்** (D) பிம்பிசாரர்

118. யாருடைய ஆட்சிக்காலம் இந்தியாவின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது?

(A) முதலாம் சந்திர குப்தர் (B) சமுத்திர குப்தர்

**(C) இரண்டாம் சந்திர குப்தர்** (D) குமார குப்தர்

119. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க. சரியானது எது/எவை?

1. ஹர்சர் - ஹர்ச சரிதம், ரத்னாவளி, பிரியதர்சிகா போன்ற நூல்களைப் படைத்துள்ளார்.
2. புனித பயணிகளின் இளவரசர் - யுவான் சுவாங்.
3. ஹர்சர் ஆட்சியின் சிறப்புக் கூறு - மக்கள் நலன் மிகுந்தது.
4. ஹர்சரது ஆவணக்காப்பகம் “நிலோபிது” என அழைக்கப்பட்டது.

(A) அனைத்தும் சரி (B) 2, 3, 4 சரி **(C) 2, 4 மட்டும்** (D) 2, 3 மட்டும்

120. “வாத்ய வித்யாதரன், ஆகமப்பிரியன்” போன்ற சிறப்பு பெயர்களுக்கு பொருத்தமானவர்

(A) முதலாம் நரசிம்மவர்மன் **(B) இரண்டாம் நரசிம்மவர்மன்**

(C) முதலாம் மகேந்திரவர்மன் (D) முதலாம் ராஜேந்திரன்

121. “இராஜசிம்மேஸ்வரம்” என அழைக்கப்படும் கோயிலை கட்டியவர்

(A) முதலாம் மகேந்திரவர்மன் (B) முதலாம் நரசிம்மவர்மன்

**(C) ராஜசிம்மன்** (D) இரண்டாம் நந்திவர்மன்

122. சுதந்திரத்திற்கு முன்பாக சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளின் எண்ணிக்கை

(A) 8 (B) 6 **(C) 7** (D) 5

123. பொருத்துக.

| <u>பிராந்திய கூட்டமைப்புகள்</u> | | <u>பெயர்கள்</u> | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. இராமநாதபுரம் | - | 1. கேரள வர்மா | (A) | 1 | 2 | 4 | 3 |
| b. திருநெல்வேலி கூட்டமைப்பு | - | 2. கோபால நாயக்கர் | **(B)** | **4** | **3** | **2** | **1** |
| c. திண்டுக்கல் கூட்டமைப்பு | - | 3. வீரபாண்டிய கட்டபொம்மன் | (C) | 4 | 3 | 1 | 2 |
| d. கோயம்புத்தூர் | - | 4. மருது பாண்டியர் | (D) | 1 | 2 | 3 | 4 |

124. காந்தியின் முதல் அகில இந்திய சத்தியாகிரக போராட்டம்

**(A) ரௌலட் சத்யாகிரகம்**

(B) வெள்ளையனே வெளியேறு போராட்டம்

(C) சாம்பரான் சத்தியாகிரகம்

(D) கேடா சத்யாகிரகம்

125. தவறானதைத் தேர்க.

(A) மிதவாதிக்கெல்லாம் மிதவாதி - V.S. சீனிவாச சாஸ்திரி

(B) தமிழ்நாட்டு தீவிரவாதத் தந்தை - விஜயராகவாச்சாரி

(C) வங்காள அமைதியின்மையின் தந்தை - S.N. பானர்ஜி

**(D) தென்னாட்டுத் திலகர் - சுப்பிரமணிய பாரதி**

126. காமராஜர் பற்றிய கூற்றுகளுள் சரியானது

I. இவர் 1955-ல் மாநில சமூக நல வாரியம் ஏற்படுத்தினார்.

II. 1956-ல் தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்கினார்.

III. 1957-ல் எட்டயபுரத்தில் இலவச மதிய உணவு திட்டத்தைத் துவக்கினார்.

IV. 1955-ல் ஆவடியில் V.N. தேபர் தலைமையில் காங்கிரஸின் 60-வது மாநாடு நடைபெற்றது.

(A) அனைத்தும் சரி

(B) I, II, IV சரி

**(C) II, IV சரி**

(D) III ஐத் தவிர அனைத்தும் சரி

127. காங்கிரஸின் வாழ்வு தடுமாறிக் கொண்டிருக்கிறது அதை குழி தோண்டி புதைத்து விட்டுத்தான் இந்தியாவை விட்டு செல்வேன் என்று கூறியவர்

**(A) கர்சன் பிரபு**

(B) வெல்லெஸ்லி

(C) லிட்டன் பிரபு

(D) காரன்வாலிஸ்

128. இந்தியாவின் மாஜினி என அழைக்கப்படுபவர்

(A) V.D. சவார்க்கர்

**(B) ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா**

(C) திலகர்

(D) அர்விந்த் கோஷ்

129. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றின் திருப்பு முனை

**(A) ஜாலியன் வாலாபாக் படுகொலை** (B) ஒத்துழையாமை இயக்கம்

(C) ரௌலட் சட்டம் (D) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

130. இந்திய சுதேச அரசுகளில் பெரியதான ஹைதராபாத் இந்தியாவோடு இணைக்கப்பட்ட ஆண்டு

(A) 1950 (B) 1947 **(C) 1948** (D) 1949

131. பின்வருபவர்களை அவர்களின் பதவிக்கால அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.

I. கர்சன் பிரபு II. லிட்டன் பிரபு III. எல்ஜின் பிரபு IV. நார்த் புரூக் பிரபு

**(A) III, IV, II, I** (B) III, IV, I, II (C) II, III, IV, I (D) I, II, III, IV

132. பொருந்தாதது.

(A) பதேர் பாஞ்சாலி - பிபூதி பூசன் பானர்ஜி

(B) இந்தியப் பிரிவினை - ராஜேந்திர பிரசாத்

(C) நீல் தர்பன் - தீனபந்து மித்ரா

**(D) குலாம் கிரி - நாராயண குரு**

133. இந்திய குடிமைப் பணிகளின் தந்தை

(A) கர்சன் பிரபு **(B) காரன்வாலிஸ் பிரபு**

(C) ரிப்பன் பிரபு (D) வில்லியம் பெண்டிங் பிரபு

134. பசுமைப் புரட்சிக்கு முன்னோடித் திட்டம்

(A) IRDP (B) MRTP **(C) IADP** (D) எதுவுமில்லை

135. இந்திய உணவுக்கழகம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு?

(A) 1945 (B) 1955 (C) 1956 **(D) 1965**

136. பணம் என்பது?

I. இடையீட்டுக் கருவி

II. மதிப்பின் அளவுகோல்

III. மதிப்பின் நிலைகள்

IV. எதிர்கால செலுத்துகை

இவற்றுள் எது, எவை சரி?

(A) I, II, III சரி **(B) அனைத்தும் சரி** (C) I, II மட்டும் (D) II மட்டும்

137. பொருந்தாதது எது

(A) மக்கள் தொகை விதி - மால்தஸ்

(B) வாடகை கோட்பாடு - ரிக்கார்டோ

(C) கூலிக் கோட்பாடு - J.S. மில்

**(D) அங்காடி விதி - J.P. கிளார்க்**

138. செல்வ உற்பத்தி மற்றும் செல்வ பகிர்வு சார்ந்த செயல்முறை அறிவியல் என்று பொருளியலை வரையறை செய்தவர்

(A) ஆடம்ஸ்மித் (B) ஆல்பிரட் மார்ஷல் (C) சாமுவேல்சன் **(D) J.S. மில்**

139. பொருளியலின் பிரிவுகளுள் பொருந்தாதது

(A) நுகர்வு **(B) சேமிப்பு** (C) பகிர்வு (D) பரிமாற்றம்

140. பொருளாதாரத்தில் நாம் பயன்படுத்துவது

(A) பகுத்தாய்வு முறை (B) தொகுத்தாய்வு முறை

**(C) A & B** (D) எதுவுமில்லை

141. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. நல இலக்கணம் | - | 1. ஆடம் ஸ்மித் | (A) | 3 | 4 | 1 | 2 |
| b. நவீன பொருளியல் (பற்றாக்குறை) | - | 2. ஆல்பிரடு மார்ஷல் | (B) | 4 | 3 | 1 | 2 |
| c. செல்வ இலக்கணம் | - | 3. சாமுவேல்சன் | **(C)** | **2** | **4** | **1** | **3** |
| d. நவீன பொருளாதார இலக்கணம் | - | 4. இலயனல் ராபின்ஸ் | (D) | 2 | 3 | 1 | 4 |

142. அருமைப் பணம் என்பது

**(A) வட்டி வீதம் அதிகம், பண அளிப்பு குறைவு**

(B) வட்டி வீதம் குறைவு, பண அளிப்பு அதிகம்

(C) வட்டி வீதம் மற்றும் பண அளிப்பு அதிகம்

(D) வட்டி வீதம் மற்றும் பண அளிப்பு குறைவு

143. கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனி. சரியானது எது/எவை?

I. பண்டங்களின் விலை குறைந்து கொண்டே செல்வது பணவாட்டம்.

II. பணவாட்டம், பண வீக்கத்திற்கு எதிரிடையானது.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி **(C) I & II சரி** (D) எதுவுமில்லை

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

144. பொருந்தாதது எது?

(A) வருமான வரி (B) வெகுமதி வரி (C) தீர்வை வரி **(D) விற்பனை வரி**

145. நிதிக் கொள்கையின் நோக்கங்களில் பொருந்தாதது

(A) முழு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி

(B) நிதிக் கொள்கையும், மூலதன ஆக்கம்

**(C) பொதுத்துறையை வளர்ச்சி அடையச் செய்தல்**

(D) பண வீக்கத்தை கட்டுப்படுத்தி, பொருளாதாரத்தை நிலைப்படுத்தல்

146. பூஜ்ய நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு --------------- ஆண்டாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது

(A) அடிப்படை ஆண்டு (B) நிதியாண்டு **(C) புதிய ஆண்டு** (D) கல்வி ஆண்டு

147. பொது மக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது

**(A) $M_1$** (B) $M_2$ (C) $M_3$ (D) $M_4$

148. ஓர் இரண்டிலக்க எண்ணின் இலக்கங்களின் பெருக்குத்தொகை 8. அந்த எண்ணுடன் 18யைக் கூட்ட அந்த எண்ணின் இலக்கங்கள் இடம் மாறுகிறது எனில் அந்த எண்ணைக் காண்க.

(A) 18 **(B) 24** (C) 42 (D) 81

149. $54^{663}$ இல் ஒன்றாம் இலக்கம் காண்க.

(A) 2 (B) 1 **(C) 4** (D) 5

150. ஒரு வகுப்பில் உள்ள 10 மாணவர்களின் சராசரி எடை 50kg ஆகும். மேலும் அவ்வகுப்பிற்கு ஒரு புதிய மாணவன் வந்த பிறகு சராசரியில் 2kg குறைகிறது எனில் புதிய மாணவனின் எடை காண்க.

(A) 30kg (B) 72kg **(C) 28kg** (D) 70kg

151. 12, 14, 18 மற்றும் 20 ஆல் மீதியின்றி வகுபடும் மிகச்சிறிய ஐந்திலக்க எண்

(A) 10820 (B) 11340 (C) 12600 **(D) 10080**

152. ராம் மற்றும் அவரது மகனின் வயது விகிதம் 8:5. மேலும் அவர்களின் வயதுகளின் பெருக்கற்பலன் 640 எனில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயது விகிதம்

**(A) 37:25** (B)31:27 (C) 33:17 (D) 35:51

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

153. இரு எண்களின் கூடுதல் 1560 ஆகும். முதல் எண்ணின் 8% ஆனது, இரண்டாவது எண்ணின் 5% க்குச் சமம் எனில் முதல் எண்ணைக் காண்க.

(A) 680 **(B) 600** (C) 720 (D) 785

154. 3000 பேர் மக்கட்தொகை கொண்ட கிராமத்தில் 60% பேர் ஆண்கள். ஆண்களுள் 20% பேர் அரசு ஊழியர்கள் மொத்த மக்கட்தொகையில் 40% பேர் அரசு ஊழியர்கள் எனில் பெண்களில் அரசு ஊழியர்கள் எத்தனை சதவீதம் பேர் உள்ளனர்?

**(A) 70%** (B) 82% (C) 85% (D)78. 5%

155. அருண் என்பவர் இரண்டு சமமான அசல் தொகைகளை 2 மற்றும் 4 ஆண்டுகளில் ஒவ்வொரு வங்கியிலும் 12% ஆண்டு வட்டிவீதத்தில் முதலீடு செய்கின்றார். இரண்டு வங்கிகளிலும் கிடைத்த தனிவட்டிகளின் வேறுபாடு ₹480 எனில், அசல் தொகை காண்க.

(A) ₹2500 (B) ₹3000 **(C) ₹2000** (D) ₹3500

156. ஒரு தொகையானது கூட்டுவட்டி வீதத்தில் 2 ஆண்டுகளில் ₹4000 ஆகவும், 4 ஆண்டுகளில் ₹8000 ஆகவும் மாறுகிறது எனில் அசல் தொகை காண்க.

**(A) ₹2000** (B) ₹2250 (C) ₹3375 (D) ₹3750

157. $5P_3$ ன் மதிப்பு காண்க.

(A) 120 (B) 80 **(C) 60** (D) 40

158. இரு பகடைகள் வீசப்படுகின்றன. 10 ஐ விட கூடுதலாகக் கிடைப்பதற்கான நிகழ்தகவு

**(A) $\frac{1}{12}$** (B) $\frac{1}{24}$ (C) $\frac{2}{35}$ (D) $\frac{3}{28}$

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

159. ரகு என்பவர் 160மீ தூரத்தை சைக்கிளில் 20 விநாடிகளில் கடக்கிறார். எனில் அவரது வேகம் காண்க.

(A) 14.4 கி.மீ/மணி **(B) 28.8 கி.மீ/மணி** (C) 12 கி.மீ/மணி (D) 14 கி.மீ/மணி

160. 150மீ நீளமுள்ள ஒரு தொடரி 30 கி.மீ/மணி வேகத்தில் பயணிக்கிறது. எனில் 175மீ நீளமுள்ள நடைமேடையை கடக்க ஆகும் நேரம் காண்க.

(A) 13 வினாடிகள் (B) 26 வினாடிகள்

(C) 72 வினாடிகள் **(D) 39 வினாடிகள்**

161. ஒரு வானொலிப்பெட்டியின் குறித்த விலை ₹500. கடைக்காரர் ஒருவர் 15% தள்ளுபடி தந்தும் 10% லாபம் அடைகிறார். அவர் தள்ளுபடி செய்யாமலிருந்தால் அடையும் லாப சதவீதம் காண்க.

(A) 19.41% (B) 39.21% (C) 28.41% **(D)29.41%**

162. ஒரு நேர்மையற்ற வியாபாரி அடக்க விலைக்கே பொருட்களை விற்பனை செய்கிறார். ஆனால் 1 கிலோவுக்குப் பதிலாக 940 கிராம் எடை போடுகிறார் எனில் அவர் அடையும் லாப சதவீதம்

(A) 6.9% (B) 4.2% **(C) 6.38%** (D)4.28%

163. A மற்றும் B இருவரும் ஒரு வேலையை முறையே 10 மற்றும் 5 நாட்களில் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து வேலையைத் தொடங்குகின்றனர். 3 நாட்களுக்குப் பிறகு A விலகுகிறார். மீத வேலையை B முடிக்க ஆகும் நாட்கள் எவ்வளவு

(A) ¼ நாள் (B) 2 நாட்கள் **(C) ½ நாள்** (D)4 நாட்கள்

164. அனு மற்றும் சீதாவிடம் 2:7 என்ற விகிதத்திலும், சீதா மற்றும் மாலாவிடம் 4:9 என்ற விகிதத்திலும் பணம் உள்ளது. அனுவிடம் உள்ள பண மதிப்பு ₹350 எனில் மாலாவிடம் உள்ள தொகை எவ்வளவு?

**(A) ₹2756.25** (B) ₹2576.25 (C) ₹2675.25 (D) ₹2657.25

165. பாலும், நீரும் 4:2 என்ற விகிதத்தில் உள்ளன. அக்கலவையில் 4லி நீர் சேர்த்த பிறகு பாலும், நீரும் 2:3 என்ற விகிதமாக மாறுகிறது எனில் ஆரம்ப நிலையில் பாலின் அளவு

(A) 2 லி (B) 3.5 லி **(C) 4 லி** (D) 4.32 லி

166. 2, 5, 9 ன் நான்காவது விகித சமன் காண்க.

(A) $\frac{18}{5}$ (B) $\frac{43}{2}$ (C) $\frac{18}{7}$ **(D)** $\mathbf{\frac{45}{2}}$

167. கோழிகளும், பசுக்களும் அடைக்கப்பட்ட பட்டியில் மொத்தக் கால்களின் எண்ணிக்கையானது தலைகளின் எண்ணிக்கையின் இருமடங்கை விட 14 அதிகம் எனில் பசுக்களின் எண்ணிக்கை

(A) 17 (B) 14 **(C) 7** (D) 2

168. ஒரு தேர்வில், ஒரு மாணவன் சரியான பதிலுக்கு 4 மதிப்பெண்கள் பெறுகிறான். தவறான பதிலுக்கு 1 மதிப்பெண் இழக்கிறான். அவன் அனைத்து 60 வினாக்களுக்கும் பதிலளித்து 130 மதிப்பெண்கள் பெறுகிறான். எனில் அவன் சரியாக பதிலளித்த வினாக்களின் எண்ணிக்கை

**(A) 38** (B) 36 (C) 130 (D) 48

169. ஒரு எண்ணின் $\frac{3}{10}$ பங்கானது மற்றோர் எண்ணின் 36% க்குச் சமம். மேலும் அவ்விரு எண்களின் கூடுதல் 88 எனில் சிறிய எண்ணைக் காண்க.

(A) 38 **(B) 40** (C) 48 (D) 34

170. ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் விகிதம் 3:5:7 சிறிய கோணத்தின் இரு மடங்குக்கும், பெரிய கோணத்தின் பாதிக்கும் இடையே உள்ள வேறுபாடு காண்க.

(A) 25° (B) 36° (C) 38° **(D) 30°**

171. 3 ஆண்கள் அல்லது 8 சிறுவர்கள் ஒரு வேலையை 17 நாட்களில் செய்து முடிப்பர் எனில் 2 ஆண்களும் 6 சிறுவர்களும் இணைந்து அவ்வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

(A) 9 நாட்கள் (B) 11 நாட்கள் (C) 14 நாட்கள் **(D) 12 நாட்கள்**

172. ஓர் எண்ணின் வர்க்கத்திலிருந்து 92 யைக் கழித்தால் 544 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க.

**(A) 25** (B) 26 (C) 32 (D) 27

173. ராமுவின் சம்பளம் ஒவ்வொரு மாதமும் 4% உயர்த்தப்படுகிறது. அவரது ஆகஸ்ட் மாதச் சம்பளம் ₹6300 எனில் அக்டோபர் மாதச் சம்பளம் உத்தேசமாக என்னவாக இருக்கும்?

(A) ₹ 6552 (B) ₹ 6967 **(C) ₹ 6814** (D) ₹6627

174. விடுபட்ட எண்ணைக் காண்க. 15, 22, 36, 57, 85, ----

**(A) 120** (B) 150 (C) 110 (D) 90

175. $\frac{3}{5}, \frac{5}{8}, \frac{16}{25}, \frac{4}{5}$ மற்றும் $\frac{9}{16}$ என்ற பின்னங்களை ஏறுவரிசையில் அமைத்தால் இரண்டாவதாக அமையும் பின்னம்

(A) $\frac{9}{16}$ (B) $\frac{16}{25}$ **(C) $\frac{3}{5}$** (D) $\frac{4}{5}$

176. சுபாஷ் ₹ 25000 முதலீட்டின் தொழில் தொடங்குகிறார். 6 மாதங்களுக்குப் பிறகு ஆதித்யா ₹ 15000 முதலீட்டுன் இணைகிறார். மீண்டும் 6 மாதங்களுக்குப் பிறகு மேலும் ₹ 15000 முதலீடு செய்கிறார் மூன்று வருட முடிவில் ₹ 2,47,000 லாபம் ஈட்டுகின்றனர் எனில் ஆதித்யாவின் லாபப் பங்கு எவ்வளவு?

(A) ₹ 1,30,000 (B) ₹ 1,23,000 (C) ₹1,05,000 **(D) ₹1,17,000**

177. A மற்றும் B ஆகியோரின் சம்பள விகிதம் 4:5. A இன் சம்பளம் 20% உயர்த்தப்படுகிறது. B இன் சம்பளம் 20% குறைக்கப்படுகிறது. தற்போது அவர்களின் சம்பள விகிதம் 6:5 எனில் A ன் சம்பளம் எவ்வளவு?

(A) ₹ 22,000 (B) ₹ 27,500 (C) ₹26,400 **(D) தீர்மானிக்க இயலாது**

178. 180 மீட்டர் நீளமுள்ள ஒரு தொடரி அதே நீளமுள்ள நடைமேடையை 18 வினாடிகளில் கடக்கிறது எனில் அத்தொடரியின் வேகம் காண்க.

(A) 22 மீ/வினாடி (B) 18 மீ/வினாடி **(C) 20 மீ/வி** (D) 21.5 மீ/வினாடி

179. a,b,c மற்றும் d என்பன அடுத்தடுத்த இயல் எண்கள். a மற்றும் d இன் கூடுதல் 103 எனில் b மற்றும் c இன் பெருக்கற்பலன் காண்க.

**(A) 2652** (B) 2562 (C) 2970 (D) 2550

180. ரகு என்பவர் ஒரு பொருளை ₹460 க்கு விற்பதன் மூலம் 15% லாபம் பெறுகிறார். எனில் அவர் 20% லாபம் பெற அப்பொருளை எத்தனை ரூபாய்க்கு விற்க வேண்டும்?

(A) ₹483 **(B) ₹480** (C) ₹498 (D) ₹ 485

181. 10 சிறுவர்களின் சராசரி எடையானது, 15 சிறுமிகளின் சராசரி எடையை விட 5 கிலோ அதிகம். 10 சிறுவர்களின் மொத்த எடை 550 கிலோ எனில் 10 சிறுவர்கள் மற்றும் 15 சிறுவர்களின் சராசரி எடை காண்க.

**(A) 52 கிலோ** (B) 52 .5கிலோ (C) 53 கிலோ (D) 53.5 கிலோ

182. ஒரு பின்னத்தின் தொகுதியை 10% அதிகரித்தும், பகுதியை 20% அதிகரித்தும் கிடைக்கும் பின்னம $\frac{22}{45}$ எனில் உண்மையான பின்ன மதிப்பு காண்க.

(A) $\frac{18}{15}$ (B) $\frac{11}{15}$ **(C) $\frac{8}{15}$** (D) தீர்மானிக்க இயலாது

183. பிரபு என்பவர் ₹35,645 யை இருசக்கர வாகனத்திற்காகவும், ₹24,355 யை தொலைக்காட்சி வாங்குவதற்காகவும் செலவிடுகிறார். மீதமுள்ள 20% பணத்தை கையிருப்பாக வைத்துள்ளார் எனில் ஆரம்பத்தில் அவரிடம் இருந்த மொத்தத் தொகை எவ்வளவு?

(A) ₹60,000 (B) ₹72,000 **(C) ₹75,000** (D) ₹ 80,000

184. கோபி மற்றும் பாபு இருவரின் தற்போதைய வயதுகளின் விகிதம் 8:15. மேலும் 9 அண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயது விகிதம் 11:18 ஆக இருக்கும் எனில் தற்போதைய அவர்களின் வயதுகளின் வித்தியாசம்

(A) 24 (B) 20 (C) 33 **(D) 21**

185. ஐந்து இயல் எண்களின் கூடுதல் 555. முதல் இரண்டு எண்களின் சராசரி 75 மற்றும் மூன்றாவது எண் 115 எனில் கடைசி இரு எண்களின் சராசரி காண்க.

**(A) 145** (B) 290 (C) 265 (D) 150

186. $\frac{?}{144} = \frac{16}{?}$ கேள்விக்குறியிட்ட இடத்தில் வரும் எண் யாது?

(A) 24 (B) 56 **(C)48** (D) 32

187. செவ்வக வடிவ பிளாட்டின் நீளமானது, அகலத்தை விட மூன்று மடங்கு ஆகும். மேலும் அந்த பிளாட்டின் பரப்பளவு 7803 ச.மீ எனில் அதன் அகலம் காண்க.

**(A) 51 மீ** (B) 153 மீ (C) 104 மீ (D) 88மீ

188. 3y + 9x = 54 மற்றும் $\frac{28x}{13y} = \frac{140}{39}$ எனில் y-x ன் மதிப்பு காண்க.

(A) -1 **(B) -2** (C) 2 (D) 1

189. பள்ளி ஆண்டு விழா ஒன்றில் 112 மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அன்று பள்ளிக்கு 32 மாணவர்கள் வரவில்லை. எனவே வந்திருந்த மாணவர்களுக்கு கூடுதலாக 6 இனிப்புகள் வழங்கப்பட்டன. எனில் ஆரம்பத்தில் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட இருந்த இனிப்புகளின் எண்ணிக்கை.

(A) 24 (B) 18 **(C) 15** (D) 20

190. $\sqrt[3]{?} = (756 \times 67) \div 804.$ கேள்விக்குறியிட்ட இடத்தில் வரும் எண் யாது?

(A) 195112 **(B) 250047** (C) 226981 (D) 274625

191. ஓர் எண்ணின் 67% க்கும், அதே எண்ணின் 43% க்கும் இடையேயான வேறுபாடு 912 எனில் அந்த எண்ணின் 19% ன் மதிப்பு காண்க.

(A) 608 (B) 798 **(C) 722** (D) 684

192. ஒருவனால் ஒரு பாட்டிலை 6 நிமிடத்தில் நிரப்ப இயலும். 11.30 A.M. க்கு தொடங்கி 12.30 P.M. வரையில் 1845 பாட்டில்கள் நிரப்பப்பட்டன எனில் அவ்வேலைக்கு அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை காண்க.

(A) 121 **(B) 123** (C) 127 (D) 125

193. பொருத்துக.

| இயற்பியல் அளவு | | அலகு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. அடர்த்தி | - | 1. $kgm^{-2}$ | (A) | 1 | 2 | 3 | 4 |
| b. உந்தம் | - | 2. $kgms^{-2}$ | (B) | 4 | 1 | 2 | 3 |
| c. நிலைம திருப்பு திறன் | - | 3. $kgm^{-3}$ | **(C)** | **3** | **4** | **1** | **2** |
| d. விசை | - | 4. $kgms^{-1}$ | (D) | 4 | 3 | 2 | 1 |

194. மின் உயர்த்தி (Lift) கீழ்நோக்கி முடுக்கப்படும்போது

(A) மனிதரின் உண்மை எடையைவிட தோற்ற எடை அதிகம்

**(B) மனிதரின் உண்மை எடையைவிட தோற்ற எடை குறைவு**

(C) மனிதரின் உண்மை எடை, தோற்ற எடைக்குச் சமம்

(D) மனிதரின் உண்மை எடை சுழி

195. கூற்று (A) : அணுக்கரு துகள்களுக்கிடையே ஏற்படும் மோதலின்போது நேர்க்கோட்டு உந்தமும், இயக்க ஆற்றலும் மாற்றமடையாது.

காரணம் (R) : இயக்க ஆற்றலில் இழப்பு ஏற்பட்டால் அம்மோதல் மீட்சியற்ற மோதல் அல்லது பிளாஸ்டிக் மோதல் என கருதப்படும்.

(A) A, R இரண்டும் தவறு

(B) A, R இரண்டும் சரி. A, R க்கு சரியான விளக்கம்

**(C) A, R இரண்டும் சரி. A, R க்கு சரியான விளக்கமல்ல**

(D) A தவறு R சரி

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

196. துணிகளைத் துவைப்பதற்குத் தண்ணீரைக் காட்டிலும் வெந்நீர் பயன்படுத்தப்படுவது

**(A) நீரின் பரப்பு இழுவிசையை குறைப்பதற்கு**

(B) நீரின் பரப்பு இழுவிசையை அதிகரிப்பதற்கு

(C) நீரின் பாகுநிலை விசையை குறைப்பதற்கு

(D) நீரின் பாகுநிலை விசையை அதிகரிப்பதற்கு

197. ஐன்ஸ்டீன் கண்டுபிடிப்புகளுள் பொருந்தாதது

(A) ஒளிமின் விளைவு (B) சார்பியல் கொள்கை

(C) நிறை ஆற்றல் இணைமாற்றுச் சமன்பாடு **(D) பொது ஈர்ப்பியல் விதி**

198. ரஷ்யா ஏவிய உலகின் முதல் விண்வெளி நிலையம்

(A) ஸ்புட்னிக் (B) ஆர்யபட்டா **(C) சல்யூட் 1** (D) ஹப்புள்

199. கடலில் மிதக்கும் கப்பல் மற்றும் பனிக்கட்டிகள் தொலைவில் இருந்து காணும்போது வானத்தில் உள்ளது மாதிரி தெரிகிறது. இந்த ஒளியியல் மாயத்தோற்றம் இவ்வாறு அழைக்கப்படுகிறது

(A) கானல் நீர் (B) ஒளி எதிரொளிப்பு

**(C) லூமிங்** (D) தெளிவுறு காட்சி

200. செயற்கைகோள் மூலம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் வானிலைப்படம் எவ்வுயரத்தில் சுற்றி வரும் செயற்கைகோளால் படம் பிடிக்கப்படுகிறது

**(A) 36000 km** (B) 11.2 km (C) 360 km (D) 112 km

Kalai IAS Academy
சாதனையாளர்களின்
சரித்திர கூடம்